

# ஆசிரியர் தகுதித்தேர்வு மாதிரி வினாவிடை

www.kalvisolai.com

## குழந்தை மேம்பாடும் கற்பித்தல் முறைகளும்

262. பயிற்சி மாற்றம் நிகழ்வது
A.ஒரே ஆசிரியர் இரண்டு பாடங்களை கற்பிக்கும் போது,
B. கருத்தும் செயலும் தொடர்பு கொள்ளும் போது
C. ஒரே மொழியில் இரு பாடங்களைக் கற்கும்போது
D. கருத்துகளில் ஒற்றுமையுள்ளபோது

263. உற்றுநோக்கலின் வழியே பெறப்படும் முடிவுகளின் நம்பகத் தன்மை அதிகரிக்க வேண்டுமாயின்
A. அதற்கான காலம் மிகமிக அதிகம் தேவைப்படும்
B. பல குழந்தைகளை ஒரே சமயத்தில் உற்று நோக்க வேண்டும்
C. நமது ஊகங்களை முடிவுகளுடன் காட்டக் கூடாது
D.நடத்தையின் பல கூறுகளை ஒரே சமயத்தில் உற்றுநோக்க வேண்டும்

264. ஒருவனது வளர்ச்சிப் பண்புகளை பிறப்பு முதல் தொடர்ந்து ஆராயும் முறை
A. தனி வரலாறு B. வளர்ச்சி முறை
C. பரிசோதனை முறை D. உற்றுநோக்கல்

265.கல்வி மனவியலை திட்டவட்டமான அறிவியலாக உயர்த்த உதவிய முறை
A. அகநோக்கு B. புள்ளியியல் முறைகள்
C. தனி வரலாறு D. பரிசோதனை

266. சொற்களுக்கு முன் பொருள்கள் என்ற கருத்தை குறிப்பிட்ட கல்வியாளர்
A. ரூசோ B. பெஸ்டலாசி C. புரோபெல் D. டூயி

267. குற்றம் புரியும் இயல்பு மரபு நிலை வழி வருவது எனச் சுட்டிக் காட்ட உதவிய ஓர் ஆராய்ச்சி
A.பியர்சனின் ஆராய்ச்சி B. கோல்மெனின் ஆராய்ச்சி
C. டார்வினின் ஆராய்ச்சி D. ஜீக்ஸ் குடும்பம் பற்றிய ஆராய்ச்சி

268. பியாஜேயின் கருத்துப்படி அறிவுத் திறன் முழுமை பெறுவது
A. 5 வயதுக்கு பின் B. 11 வயதுக்குப் பின்
C. 15 வயதுக்குப்பின் D. 20 வயதுக்குப் பின்

269. புலன் உணர்ச்சிகளுக்கு நம் மனம் தவறாக பொருள் தருவதன் விளைவு
A. இல் பொருள் காட்சி B. புலன்காட்சி
C. திரிபுக்காட்சி D. கற்பனைக் காட்சி

270. உடன்பாட்டு முறையில் வலுவூட்டும் தூண்டலை ஏற்படுத்துவது
A. பரிசுப் பொருட்கள் B. தண்டனை
C. மனப்பான்மை D. கவனித்தல்

271.திட்டமிடப்பட்ட பாடப் பொருள் உருவாவதற்கு அடிப்படையாக அமைந்தது
A. பாலோவின் ஆக்கநிலைஉறுத்தல் B. ஸ்கின்னரின் ஆக்க நிலை உறுத்தல்
C. உட்காட்சி வழி கற்றல் D. மீட்டுக் கொணர்தல்

272. எரிக்சன் சமூக வளர்ச்சி நிலைகளை -------- பிரிவுகளாக பிரித்துள்ளனர்
A. 8 பிரிவு B. 5 பிரிவு C. 7 பிரிவு D. 3 பிரிவு

273. பின் வருவனவற்றுள் புலன் உறுப்பில்லாதது எது?
A. மூக்கு B. நாக்கு C. கண் D. குடல்

274.வார்த்தைகள் எண்கள் உருவங்கள் போன்ற குறியீடுகளை உள்ளத்தில் உபயோகப்படுத்தும் திறன்
A. குறியீட்டுச் சிந்தனை B. தர்க்க முறை சிந்தனை
C. அடையாளம் கண்டு வகைப்பாடு செய் சிந்தனை D. கற்பனைத்திறன்

275. ஏ-பிஐ விட உயரம், பி-சியை விட உயரம் எனில் ஏ-சியை விட உயரம் என்று அனுமானிக்கும் சிந்தனை
A. தர்க்கசிந்தனை B. குறியீட்டு சிந்தனை
B. அடையாளம் காணும் தர்க்க சிந்தனை D.எண்ணியல்சிந்தனை

276. 4 மாதங்கள் வரை குழந்தைகள் பொருட்களின் நிலைப்புத் தன்மையை
A. உணர்வதில்லை B. சற்று உணர்வார்கள்
C. சிலர் உணர்வார்கள் D. இவைஎதுவும் இல்லை

277. லிக்கர்ட் நான்கு புள்ளி அளவுகோலின் குறைபாடு
A. போதிய தெரிவுகள் இருக்காது
B. உடன்பாடு அல்லது எதிர்மறை கருத்தையே தெரிவிக்க வேண்டும்
C. துலங்கல்களை ஏற்புமை படுத்த இயலாது D. குறைபாடு இல்லை

278.5 புள்ளி லிக்கர்ட் அளவுகோலின் மாணவர் நடுநிலைப்பட்ட துலங்கல் களை தேர்ந்தெடுத்த பின் அவற்றில் இருந்து பெறப்படும் கருத்து
A. மாணவர் பொறுப்பற்றவர்
B. தன்னைப் பற்றி கணிக்க ஆர்வம் இல்லாதவர்
C. எதனையும் மிகுந்த கவனமாக கையாள்பவர்
D. தனக்கென தனி எண்ணம் கொண்டவர்

279.முன்பின் தேர்வுகள் கணிப்பீட்டிற்கு முக்கியமான கருவிகள் என்பதால் அவற்றை தயாரிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டியது
A. தேர்வை எதிர்கொள்பவர் பற்றி B. வினாக்கள் எண்ணிக்கை
C.முதன்மைக் கருத்து பொருண்மை D.தேர்வு நடத்தப்படும் நேரம்

280. ரோச்சார்ட் புறத்தேற்ற சோதனை எதை சோதிப்பதாக வடிவமைக்கப்பட்டது?
A. நினைவிலி விருப்பம் B. கனவுகள்
C. நினைவு விருப்பம் D. மூளையின் அளவு

281. கீழ்குறித்தனவற்றுள் எது புறத்தேற்று சோதனை அன்று
A. சொற்கள் இணைப்பு சோதனை B. ரோச்சார்ட் மைத்தடச் சோதனை
C. கருத்தளவை சோதனை D. வாக்கிய நிறைவுச் சோதனை

282. முன்னறிவுச் சோதனை கீழ் உள்ளவற்றுள் எதைத் தெரிவிக்காது?
A. தேர்வு, மறுதேர்வு, நம்பகத் தன்மை
B. நடத்தையை முன்கூட்டியே அறிவித்தல்
C. மிகுந்த உட்சீர்மை D. சிறந்த ஏற்புமை

283. பெரியவர்களுக்கான வெல்சரின் நுண்ணறிவு அளவு கோல் கீழ் குறித்த எத்தகுதியை அளக்க பயன்படும்?
A. வாழிட நன்மைகள் B. வருமான குறைவால் ஏற்படும் இயலாமை
C. தற்கொலை இடர் D. சிறப்பு கல்வித் தேவை

284. பின்வருவனவற்றுள் எது தேர்வு, மறு தேர்வு நம்பகத் தன்மையை குறிப்பது?
A. எதை அளக்க வேண்டுமோ அதை அளப்பதாக அமையும் தேர்வு
B. மாறாத மாற்றமில்லாத முடிவைத் தருவது
C. இரண்டாம் முறை தேர்வரிடம் முன்னேற்றம் காண்பது
D. குறிப்பிட்ட ஒன்றை மட்டும் சொல்வது

285. பின்வருவனவற்றுள் உள்தர நம்பகத் தன்மையைக் கொண்டது?
A.இரு தேர்வுகள் ஒரே தரத்தை அளக்கும் அளவு
B.மன நல மருத்துவ எதிர் நாளில் நடக்க இருக்கும் நடத்தையை வெளிப்படுத்தும் அளவு
C.இரு மன நல மருத்துவர் தேர்வின் மதிப்பெண்களை பற்றி வெளிப்படுத்தும் கருத்தின் அளவு
D. ஒரு தேர்வில் உள்ள உருக்கள் மற்றதோடு தொடர்பு கொண்டுள்ள அளவு

286. தேசிய கலைத்திட்டக் கல்வி பிரகடன ஆண்டு
A. 2002 B. 2005 C. 1950 D. 2010

287. குழந்தைகளின் இரண்டாம் பிறப்பு என்பது
A. பிள்ளைப் பருவம் B. குமரப்பருவம்
C. முதிர்ச்சிப் பருவம் D. கிழப்பருவம்

288. பின்பற்றிச் செய்தல் பாவனை விளையாட்டு ஆகியன
A. குறியீட்டு சிந்தனை B. காரண காரிய தர்க்க சிந்தனை
C. அடையாளம் கண்டு கொள்ளும் தர்க்க சிந்தனை D. எண்ணியல் சிந்தனை

289. குழந்தைகளின் மாறுபட்ட பல்வேறு வளர்ச்சிகளில் உதவுவன
A.மரபு நிலை B. சூழ்நிலை
C. மரபுநிலையும் சூழ்நிலையும் D. காலநிலை

290. குழந்தையும் கற்றல் செயல் தொடங்கும் இடம்
A. பள்ளி B. குடும்பம் C. ஊர் D. சமூகம்

291. புற உலக நிகழ்ச்சிகளில் அதிகம் பங்கு பெறாது தனது நினைவுகள், சிந்தனைகள் ஆகியவற்றிலேயே ஒன்றி இருக்கும் மனிதனுக்குப் பெயர்
A. அக முகன் B. புற முகன்
C. ஆளுமைக் கோளாறு உள்ளவன்
D. நடத்தை மாற்றம் உடையவன்

### விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 262-D | 263-C | 264-B | 265-D | 266-B | 267-D |
| 268-B | 269-C | 270-A | 271-B | 272-A | 273-D |
| 274-A | 275-A | 276-A | 277-B | 278-B | 279-C |
| 280-A | 281-A | 282-B | 283-B | 284-B | 285-C |
| 286-A | 287-C | 288-A | 289-C | 290-B | 291-A |

## தாள்–இரண்டு – தமிழ்

263. வல்லின மெய்கள்மேல் ஊர்ந்த உகரமானது ஆய்த எழுத்தை தொடர்ந்து வந்தால் அவற்றுக்கு என்ன பெயர்?
A. வல்லின மெய்குற்றியலுகரம்
B. இடையின மெய்க்குற்றியலுகரம்,
C. மெல்லின மெய்க்குற்றியலுகரம்
D. ஆய்த தொடர்க் குற்றியலுகரம்

264. சுக்கு, பட்டு- இவை எந்த வகை குற்றியலுகரம்
A. இடையின மெய்க்குற்றியலுகரம்
B. வல்லினத் தொடர்க் குற்றியலுகரம்
C. மெல்லின மெய்க்குற்றியலுகரம் D. வல்லினம்

265. கொய்து, சார்பு, மூழ்கு-- இந்த சொற்கள் எவ்வகை குற்றியலுகரம்
A. இடைத் தொடர்க் குற்றியலுகரம்
B. வல்லினத் தொடர்க்குற்றியலுகரம்,
C. மெல்லின மெய்க்குற்றியலுகரம் D. மெய்ம்மயக்கம்

266. வல்லின மெய்களின் மேல் ஊர்ந்த உகரம் சொல்லின் இறுதியில் நெடில் பக்கத்திலும், பல எழுத்துகளை சார்ந்தும் வரும்போது அது தனக்குரிய மாத்திரையில் இருந்து எப்படி ஒலிக்கிறது
A. மிகுந்து B. குறைந்து
C. அரை அளவு D. இரண்டுமாத்திரை

267. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்?
A. 12 வகை B. 15 வகை
C. 6 வகை D. 30 வகை

268. குற்றியலுகரத்துக்கு எத்தனை மாத்திரை
A. ஒரு மாத்திரை B. அரை மாத்திரை
C. கால் மாத்திரை D. இரண்டு மாத்திரை

269. நெடில் தொடர்க்குற்றியலுகரம் மட்டுமே -------எழுத்துகளை பெற்று வரும்
A. 4 B. 5 C. 2 D. 3

270. ஏனைய ஐவகை குற்றியலுகரச் சொற்கள்----------மேற்பட்ட எழுத்துகளை பெற்று வரும்
A. 5க்கு மேற்பட்ட B. 3க்கு மேற்பட்ட
C. 2க்கு மேற்பட்ட D. 4க்கு மேற்பட்ட

271. குறுகிய ஓசையுடைய இகரம்----------ஆகும்
A. குற்றியலுகரம் B. ஐகாரக்குறுக்கம்
C. குறில் D. குற்றியலிகரம்

272. குற்றியலிகரம் எத்தனை மாத்திரை குறைந்து ஒலித்து வரும்?
A. கால் மாத்திரை B. ஒரு மாத்திரை
C. அரை மாத்திரை D. இரண்டு மாத்திரை

273. குறைந்து வரும் உகரம், இகரம் ஆகியவற்றின் மாத்திரை அளவு என்ன?
A. அரை மாத்திரை B. கால் மாத்திரை
C. ஒரு மாத்திரை D. இரண்டு மாத்திரை

274.தனக்குரிய ஒரு மாத்திரை அளவில் இருந்து குறையாத உகரம்----------ஆகும்
A. குற்றியலுகரம் B. குற்றிலிகரம்
C. முற்றியலுகரம் D. வல்லினத் தொடர்க்குற்றியலுகரம்

275.அறிவியல் சார்ந்த துறைவாரியான கலைச் சொல் அகர முதலிகளைத் தொகுத்து வெளியிட்டவர்?
A. தேவநேயப்பாவாணர் B. மணவை முஸ்தபா
C. பரிதிமாற் கலைஞர் D. மறைமலை அடிகள்

276. அபிதான சிந்தாமணியை இலக்கியச் செய்திகளோடு அறிவியல் துறை பொருள்களையும் முதன் முதலாக சேர்த்து விளக்கம் தந்து வெளியிட்டவர்?
A. சிங்காரவேலனார் B. மணவை முஸ்தபா
C.தேவநேயப்பாவாணர் D. மறைமலை அடிகள்

277. அமர் என்பதன் பொருள்-------------
A. யானை B. போர் C. வெற்றி D. இறப்பு

278. தொண்ணூற்றாறு--பிரிக்கும் முறை------------
A. தொண் + ஆறு B. தொண்ணூறு + ஆறு
C. தொள்ளாயிரம் + ஆறு D. தொள் + ஆறு

279.அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்கள் நான்கையும் உணர்த்தி, மக்களை நல் வழிப்படுத்தும் இலக்கியங்கள்---------எனப்படும்
A. சிற்றிலக்கியம் B. பேரிலக்கியம்
C. காப்பியம் D. காவியம்

280. தெய்வம், அரசன், வள்ளல், குரு முதலியோரின் சிறப்பினைக் கற்பனை செய்து பாடுவது-------------
A. பேரிலக்கியம் B. காப்பியம்
C. பரணி D. சிற்றிலக்கியம்

281. சிற்றிலக்கியத்தை வட நூலார் எப்படி அழைப்பர்
A. உபநிஷதம் B. சாஸ்திரம்
C. பிரபந்தம் D. அனுபந்தம்

282. பிரபந்தம் என்பதற்கு-----------என்பது பொருள்
A. வரையறுக்கப்பட்ட B. பிரபலமான
C. புகழ்ச்சியான D. நன்கு கட்டப்பட்ட

283. தமிழ் சிற்றிலக்கியங்கள் எத்தனை வகைப்படும்
A. 100 வகை B. 1330 வகை
C. 133 வகை D 96 வகை

284. பகுபத உறுப்புகள் எத்தனை?
A. 6 B.12 C. 15 D. 24

285. பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வருவது--------- எனப்படும்
A. உயர்திணை B. இடையினம்
C. இடைநிலை D. உயர்நிலை

286. இடைநிலை காலம் காட்டுவதால்----------- என்றும் கூறுவர்
A. காலம் காட்டும் இடைநிலை B. இடைநிலை
C.சாதாரண இடைநிலை D. எதிர்மறை இடைநிலை

287. காலம் காட்டும் இடைநிலைகள் எத்தனை வகைப்படும்.
A. 4 வகை B. 6 வகை C. 12 வகை D. 8 வகை

288. பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வந்து சந்திக்க வைப்பது------
A. சந்தி B. இடைநிலை C. சாரியை D. விகாரம்

289. பெயர்ச் சொல்லையும் வினைச் சொல்லையும் சார்ந்து வருவது
A. இடைநிலை B. சந்தி C. விகாரம் D. சாரியை

290. பகுதி, இடைநிலை, விகுதி போன்றவை சேரும்போது இடையில் ஏற்படும் மாறுபாடு
A. சாரியை B. சந்தி C. இடைநிலை D. விகாரம்

291. சாதுவன் கடல் கடந்து வணிகம் செய்யும் பொருட்டு கடல் கடந்து சென்ற குறிப்பு எந்த நூலில் காணப்படுகிறது
A. சிலப்பதிகாரம் B. புறநானூறு
C. அகநானூறு D. மணிமேகலை

292. யூனியன் தீவில் வாழ்பவர்களுள் பெரும்பான்மை மக்கள்-----------
A. ஆங்கிலேயர் B. டச்சுக்காரர்
C. பிரான்சு D. தமிழர்

### விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 263-D | 264-B | 265-A | 266-B | 267-C | 268-B |
| 269-C | 270-C | 271-D | 272-C | 273-A | 274-C |
| 275-B | 276-A | 277-B | 278-B | 279-B | 280-A |
| 281-C | 282-D | 283-D | 284-A | 285-C | 286-A |
| 287-A | 288-A | 289-D | 290-D | 291-D | 292-3 |

தொடரும் - 10